இதைப் பற்றிய பேச்சுக்கே அங்கே இடம் இல்லை. இதைப் பற்றியும் பேசாமல் அர்கள் மூன்று பேர் மட்டும் இன்றைக்கும் கிருஷ்ணா நதித் திட்டம், சர்ப்ளஸ் வாட்டரைப் பற்றிப் பேசி ஏதோ முடிவு எடுத்து இருக்கிறார்களாம். அதைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொஞ்சங்கூட தாமதம் இல்லாமல், நல்ல முடிவு எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் பேசிக்கொண்டு இருப்பது வேறு பிரச்சினை. அது அவர்களுக்குள்ளே உள்ள பங்கீடு பற்றி. இது ஆந்திர மாநிலத்திலிருந்து தெலுங்கு-கங்கைத் திட்டம் தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னை மாநகருக்குத் தண்ணீர் விடுவது குறித்த திட்டமே வேறானது. இதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : கேள்வி நேரமா இது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரமெல்லாம் முடிந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டது.

(ஆ) சென்னை மத்திய சிறையிலிருந்து, சில கைதிகள் தப்பியோடி விட்டது குறித்துப் போடப்பட்டுள்ள நீதி விசாரணை குறித்தும், சந்தன மரம் கடத்தல் செய்யும் வீரப்பன், தமிழ் நாட்டிலிருப்பதாக வந்துள்ள செய்தி குறித்தும்.

9-55 மணி

* திரு. எஸ், ஆர். பாலசுப்ரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக மிகவும் பரபரப்பாகத் தமிழகத்திலே பேசப்படுகின்ற செய்தி, ஆட்டோ சங்கர் சிறையிலே இருந்து தப்பிவிட்ட செய்தி, மிகவும் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. அவன் ஒரு பயங்கரமான குற்றவாளியாகக் கருதப்பட்டான். Eventhough he was not a cond mned prisonerஅவன் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்தான் சிறையிலேவைத்து இருக்கப்பட வேண்டும். சாதாரணமாக மாலையிலே செல்லைப் பூட்டுவதற்கு முன்னால், ரோல் கால் எடுத்து செல்லைப் பூட்டி, அந்தச் சாவிகளை எல்லாம் டவரிலே ஒப்படைத்து இருக்க வேண்டும். அதற்குப் பிறகு மீண்டும் 3 மணி நேரத்துக்கு ஒரு முறை அசிஸ்டன்ட் ஜெயிலர் ரவுண்ட் வந்து சரிபார்த்து ரிஜிஸ்டரிலே கையெழுத்துப் போட வேண்டும். இதற்கெல்லாம் மீறி அவன் தப்பித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அவனோடு அவனுக்குப் பிடிக்காத இன்னுமொரு கைதியும் அதே செல்லில் இருந்திருக்கிறான். அகரம்

1990 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

நாராயணன் அவனோடு இருந்திருக்கிறான். அவன் பயங்கர மான குற்றச்சாட்டில் ஈடுபட்டவன். அவன் தப்புவிக்க அனு மதிக்கப்படவில்லை. ஆனால் ஆட்டோ சங்கர் தப்பித்திருக் கிறான். இது எப்படி சாத்தியமானது என்பதைப் பற்றித் தான் மற்ற பலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, சிறை நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், பல்வேறான செய்திகள் வெளியிலே பேசப்படுகின்றன. பல விசாரணைக் கமிஷனுடைய அறிக்கைகளின் அடிப்படையிலே பல அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட் டிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தாலுங்கூட அவர்களுக்கு சிறைச்சாலை நிர்வாகத்திலே நல்ல செல்வாக்கு இருப்பதாகவும் அவர்கள் சிறைச்சாலை நிர்வாகத்தை தங்கள். கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும் பேசப்படுகிறது. குறிப்பாக, சஸ்பண்ட் செய்யப்பட்ட ஒரு அதிகாரி ஜூலை மாதம் 6ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு சேலம் செல்கிறார். சேலத்திலிருந்து கோவைக்குச் செல்கிறார். கோவையில் அவரை வரவேற்று எம். டி. ஈ. 5610 என்ற ஜெயில் இலாக்காவிற்குச் சொந்தமான கார் வந்து அவரை அழைத்துச் செல்கிறது. அவர் அரசாங்க மாளிகையில் தங்க வைக்கப் படுகிறார். அந்தக் காரை ஓட்டி வந்தவர் ஒரு ஜெயில் வார்டர் என்று சொல்லப்படுகிறது. அவருக்கு கோவையிலிருந்து பெங்களூர் செல்வதற்கு இரவு இரயிலில் டிக்கட் ரிசர்வேஷன் செய்யப்பட்டிருக்கிறது. ரிசர்வேஷன் பாமில் கையெழுத்து போட்டிருப்பவர் ஒரு ஜெயிலர் என்று சொல்லுகிறார்கள். அவருடைய பெயர் என்னிடத்திலே இருக்கிறது. அந்த ஜெயிலர் யார் என்று கேட்டால் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னையிலிருந்து கோவைக்கு டிரான்ஸ்பர் செய்யப் பட்டவர் என்று சொல்லுகிறார்கள். அவருடைய பெயரை சொல்லலாம் என்றால் சொல்லுகிறேன். அவருடைய பெயர் ஜெயிலர் இராமச்சந்திரன்.

அதே போல ஆட்டோ சங்கர் வழக்கிலே சம்பந்தப்பட்ட தாக அன்றைய தினம் கருதப்பட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்ட 3 அதிகாரிகள்—டி.எஸ்.பி. தங்கையா, திருவான்மியூர் இன்ஸ் பெக்டர் தலைமலை, சப்-இன்ஸ்பெக்டர் பவுன், இந்த மூன்று பேரும் ஆட்டோ சங்கரோடு சேர்ந்து ஏராளமான பணம் சம்பாதித்துவிட்டதாகக் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அவர்கள் எல்லாம் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த டி. எஸ். பி. தங்கையாவுக்கு பெருத்த செல்வாக்கு உண்டு என்று சொல்கிறார்கள். சினிமாத் துறையில் பெரிய இடத்தில் உறவினர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நிறைய செல்வாக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தச் செல்வாக்கையெல்லாம் பயன்படுத்தி அவர் மீது இருந்த சஸ் பண்ட் உத்தரவு ரத்து செய்யப்பட்டு இன்றையதினம் மீண்டும் பாலீஸ் பயிற்சி பள்ளியிலே அவர் பணிக்கு அமர்த்தப்பட்

டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவருடைய சஸ்பெண்ட் உத்திரவு எப்போது ரத்து செய்யப்பட்டது? யாரால் ரத்து செய்யப்பட்டது? எப்படிப் பணியில் அமர்த்தப்பட்டார்? பணியில் அமர்த்தப்பட்டாலும் கூட சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஒருவர் அவர் எங்கே குற்றங்கள் இழைத்தார் என்று கருதப்படுகிறதோ அதே சென்னை நகரத்திலே அவர் எப்படி பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்? அதுவும் அவர் சாட்சியங் களைக் கலைப்பதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் சென்னை யிலே செல்வாக்கு செலுத்தக் கூடிய வகையிலே ஒரு பணியில் அவர் எப்படி அமர்த்தப்பட்டார்? அவர் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் இருக்கிறார் என்று சொன்னால், அவரிடத்திலே பயிற்சி பெறுகிற அதிகாரிகள் எப்படி இருப்பார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

அதேபோல மற்ற இருவரும் கூட பணியில் அமர்த்தப் பட்டிருப்பதாக இன்றையதினம் பரவலாகப் பேசப்படுகிறது. இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் ஆட்டோ சங்கரும், அவனுடைய கூட்டாளிகளும் தப்பிக்க வேண்டுமென்றே அனு மதித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இவர் களையெல்லாம் ஆட்டோ சங்கர் மிரட்டிக் கொண்டிருக்கிறான். என்னிடத்திலே வீடியோ கேசட் இருக்கிறது, என்னிடத்திலே பல சாட்சியங்கள் இருக்கின்றன, இவர்கள் எல்லாம் என்ன கொடுமை இழைத்தார்கள் என்பதை நான் வைத்திருக்கிறேன். என்னோடு சேர்ந்து இவர்கள் செய்தார்கள் என்ற சாட்சியங் கள், தடயங்கள் என்னிடத்திலே இருக்கின்றன என்று சொல்லி மீண்டும் மீண்டும் மிரட்டிக் கொண்டிருக்கிறான். ஆகவே அவனை வெளியே விட்டு, அவனை தீர்த்துக் கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு வேண்டுமென்றே வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டான் என்று பரவலாக சென்னை நகரத்திலே இன்றையதினம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ''போலீசா ருடன் மோதல்'' என்ற பெயரால் அவனை சுட்டுத் தள்ளு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக வெளியே பேசப் படுகிறது.

அது மட்டுமல்ல. அவன் வெளியே நீண்ட நாட்கள் இருப் பது அனைவருக்கும் ஆபத்து. ஏனென்றால் அவன் ஒரு பயங்கரமான குற்றவாளி. யாருக்கும், எதற்கும் கவலைப்படக் கூடியவன் அல்ல அவன். ஆறு பேரை உயிரோடு புதைத்தவன் என்றால் எப்படிப்பட்ட பேர்வழியாக அவன் இருப்பான் என் பதை நம்மாலே ஊகித்துக்கொள்ள முடியும். அவனால், அப்ரூவராக மாறியவர்களின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. சாட்சியங்கள் சொன்னவர்களுடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அவனைப் பற்றி பேசுகின்ற எம்.எல்.ஏ.க்களுக்குக் கூட ஆபத்து ஏற்படக் கூடும். எனவே அவன் நீண்ட நாட்கள்

1990 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

வெளியே திரிய அனுமதிக்கக் கூடாது. அவனை உடனடியாகப் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், நிச்சயமாக அவன் கொல்லப்படுவான் என்று சொல்லுகிறார்கள். நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள், உயர்நீதி மன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துகிறேன் என்று இங்கே சொன்னார்கள். நான் எதிர் வரிசையிலே இருந்தாலும் அந்த அறிவிப்பை நிச்சயமாக வரவேற்கிறேன். என்றாலும் நீதி விசாரணை என்றால் எத்தனை நாட்களுக்கு நடக்கும் என்பதை நம்மாலே இறுதியாக, உறுதியாகச் சொல்ல முடியாது. சமீபத்திலே 'அடிஷனல் சொலிசிட்டர்-ஜெனரல்' டில்லியிலே ஒரு கருத்தரங்கில் பேசுகின்ற நேரத்தில், 'எல்லா நீதி விசாரணைகளையும் அடிக்கடி பணியில் இருக்கின்ற உயர்நீதிமன்ற நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதி ஆகியவர்களைக் கொண்டு விசாரணை நடத்துவது முறையல்ல' என்று சொல்லியிருக்கிறார். ஏனென்றால் They may have some sort of prejudice என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்களை இதுபோன்ற பணிகளுக்கு அடிக்கடி அழைத்து விடுவதால் வேறு பணிகள் எல்லாம் முடக்கப்படுகிறது ; எனவே அதை முடிந்தவரையில் தவிர்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் அந்த வாதத்தை ஏற்காவிட்டாலும் கூட அதையும் நீங்கள் கருத்திற் கொண்டு பரிசிலிக்க வேண்டும்.

10-00 மணி

அடுத்து, யார் அவருக்கு உதவப் போகிறார்கள்? எந்த நிறுவனம் உதவப் போகிறது என்பது முக்கியமான விஷயம். எனவே, நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இவ்வளவு சந்தேகங்கள் இருக்கிற இந்தப் பிரச்சினையில் ஒரு தெளிவான தீர்வு ஏற்பட வேண்டுமென்று சொன்னால், அந்த ஜுடிசியல் கமிஷனுக்கு ஒரு சி.பி.ஐ. டீம், ஒரு சி.பி.ஐ. என்குயரி நடத்தி அவர்கள் மூலமாக முழு உண்மையையும் வெளியே கொண்டு வர முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காலதாமதம் இல்லாமல் அவனுக்கு எந்த இடையூறும் ஏற்படாமல், அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல், ஆட்டோ சங்கரை கைது செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த அதிகாரிகளுடைய நடமாட்டத்தை முழுமையாக கண்காணிக்க வேண்டுமென்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய அதே பிரச்சினையை ஒட்டி நானும் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப ஆசைப்படுகிறேன். நீதி விசாரணையை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த நீதி விசாரணை யாருக்கு நீதி கிடைப்பதற்கு? இந்த நீதி விசாரணையால் என்ன உண்மை வெளிவரப்போகிறது? இந்த நீதி விசாரணைக்கு ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை நாம் நியமிப்போமானால், பணியில் இருக்கக்கூடிய உயர்நீதி

மன்ற நீதிபதியை நியமிப்போமானால் அவர் உயர்நீதி மன்றத்தில் நீதி செலுத்தக்கூடிய காலம் குறைகிறது. அவர் அங்கே ஒரு ஆயிரம், இரண்டாயிரம் பேருக்கு நீதி வழங்குவதை விட்டு விட்டு, இங்கே இந்த நீதி விசாரணைக்கு நாம் அமைப்போமானால் ஏற்கெனவே நம்முடைய சமுதாய நீதியைக் கெடுத்த ஒரு சமூக விரோதிக்கு இப்படியொரு நீதி விசாரணையை நாம் அமைத்திருப்பது யாருக்கு நீதி கிடைப்பதற்கு என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றொன்று. எப்படி தப்பித்தார் என்று தெரிந்துகொள் வதற்கு நீதி விசாரணை அமைக்க வேண்டாம். அதற்கு அதிகார மட்டத்தில் போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்னும் பெரிய பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர் கள் மட்டத்திலே வைத்து விசாரித்து கண்டுபிடிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.பி.ஐ. என்று சொன்னார். நான் அதற்கு மாறுபட்ட கருத்தைக் கொண்ட வன். மாநிலத்திற்குள் சி.பி.ஐ. அதிகாரமே வரக்கூடாது. ஆனால் இந்த ஆட்டோ சங்கர் வழக்கைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் தைரியமான போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள் எம். எல். ஏ.க்களுக்கே ஆபத்து வரும் என்று சொன்னார்கள். ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் விசாரணை தள்ளித் தள்ளிப் போன காரணத்தால் தான் அவனே இன்றைக்கு உயிரோடு இருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு சமூக விரோ திக்கு இன்றைக்கு வேகமாக ஒரு தீர்ப்பைப் பெற்றிடுவதற்கு அரசாங்கம் முயல வேண்டுமேயொழிய அதற்காக ஒரு நீதி விசாரணையை நியமிக்க வேண்டாம் என்பது தான் என்னுடைய கருத்தாகும்.

மற்றொன்று. இன்றைக்கு காலை பத்திரிகையில் பார்த் தேன். சந்தன மரம் கடத்தல் மன்னன் வீரப்பன் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருப்பதாக அங்கே கர்நாடக மாநில அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் இன்னும் நாம் கண்டு பிடிக்கவில்லை. அதிகாரிகளுக்கு முழு சுதந்திரத்தைக் கொடுத்து, இன்னும் சொல்லப்போனால் போலீஸ் ஐ.ஜி.யாக இருக்கிற திரு. தேவாரம் கையில் இந்த அதிகாரத்தைக் கொடுங்கள். ஒன்று உயிரோடு கொண்டு வருவார், இல்லை யென்றால் பிணத்தையாவது உங்கள் கையில் கொடுப்பார் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நம் முடைய தமிழ்நாட்டை அச்சுறுத்தக் கூடிய அளவிற்கு போலீஸ் துறைக்கே இந்த இரண்டு சமூக விரோதிகள் இன் றைக்கு சவாலாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத் திற்கே சவாலாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பேரையும் கண்டுபிடித்து நாம் நடவடிக்கை எடுக்க வில்லையென்றால், இந்த நாட்டில் சட்டம் இருக்கிறதா,

இல்லையா என்ற சந்தேகம் சட்டத்தைப் பின்பற்றுகிற மக்களுக்கு வந்துவிடும் என்ற காரணத்தால் தெரிவிக்கிறேன். தைரியமான அதிகாரி திரு. தேவாரம், இந்த இரண்டு பேரையும் பிடிப்பதற்கு உடனே முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அண்ணாநம்பி அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு இருப்பதால், அவர் அவையிலிருந்து வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) 'Marshall' அவரை வெளியேற்றலாம்.

(திரு. அண்ணாநம்பி பேரவையினின்றும் வெளியேற்றப் பட்டார்.)

10.05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களும், நண்பர் பாண்டியன் அவர்களும் ஆட்டோ சங்கர் சிறையிலிருந்து தப்பியதன் அடிப்படையில் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நண்பர் பாண்டியன் அவர்கள் இந்த நீதி விசாரணை எந்த நீதியைத் தெரிந்துகொள்ள, எந்த நீதியை வரவழைக்க என்ற அடிப்படையிலே தன்னுடைய கருத்தை இங்கே அமைத்து, வினா எழுப்பினார்கள். நீதிபதி விசாரணையைத் தான் நாம் சுருக்கி நீதி விசாரணை என்று சொல்கிறோம். ஏற்கெனவே இந்த வழக்கு, மாநில கிரைம் பிராஞ்சுக்குத் தரப்பட்டு, புலன் விசாரணையில் அவர்கள் ஈடு பட்டு இருக்கிறார்கள்.

நான் நேற்றைக்கு முன் தினமும், நேற்றும் அறிவித்ததைப் போல, அந்த சிறைச்சாலையில் உள்ள சூப்பிரின்டெண்டண்ட் உள்பட 13 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பேர்கள் கைது செய்யப்பட்டு, மற்றவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கமும் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது ஒரு பெரிய நடவடிக்கை என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நடவடிக்கை எடுத்து, ஒரு அதிகாரியைக் கொண்டே விசாரணை என்கிற அளவிலே கூட நிறுத்தி இருக்கலாம். அப்படிப்பட்ட—விவாதத்தில்—கருத்துக்கள் கூட அதிகாரிகள் மட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. இருந்தாலும் கூட ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதன் மூலம் நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கான உண்மைகள் வெளிப்படும், வெளிப்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த உறுதியாக இருக்கிற காரணத்தாலேதான், அவைகள் வெளி வரவேண்டும் என்பதற்காகத்தான் நீதிபதியைக் கொண்டு அந்த விசாரணை நடைபெற வேண்டும் என்ற அந்த முடிவை எடுத்து, நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்ட் 23

உண்மையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே நடைபெற்று இருக்கின்றன, எத்தகைய திரைமறைவுப் பணிகள் கடந்த ஆண்டுகளில் நடந்திருக்கின்றன, அரசுக்குத் தெரியாமல், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வராமல் அரசினுடைய கண்களை மறைத்துவிட்டு, அரசு அதிகாரிகள் சிலரே இதுபோன்ற ஒரு சமுதாய விரோதியினுடைய செயல்களுக்கு உடன்பாடாக இருந்து இருப்பதும், அவன் சிக்சிக் கொண்ட பிறகு அவனையும் அவனுடைய கூட்டாளிகளையும் விடுவிப்பதற்குஉடந்தையாக இருந்திருப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்களாகும். அப்படிப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது மாத்திரம் அல்ல, அவர்களுக்கு யார் யார் ஒத்துழைத்தார்களோ, அவர்களையும் அடையாளம் காட்டவேண்டும். இந்த மாநில கிரைம் பிராஞ்ச் புலன் விசாரணையோடு முடிவுற்று ஓடியவர்கள் பிடிக்கப்பெற்று, ஓடுவதற்குக் காரணமாக இருந்த சில பேர்கள் தண்டிக்கப்பட்டால் மட்டும் போதாது என்பது என்னுடைய எண்ணம்.

அதற்குப் பின்னாலே, பின்னணியிலே, எத்தனை பேர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், ஆரம்பகாலத்திலே மிகுந்த பரபரப்போடு ஆட்டோ சங்கர் கைது செய்யப்பட்ட காலத்திலே வெளிவந்த பல விவரங்கள், அதற்குப் பிறகு, அவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து 'ஃபேட் அவுட்' ஆகிவிட்ட நிலையிலே மறைந்துவிட்ட பல விஷயங்கள், இவைகள் எல்லாம் மீண்டும் கிளப்பப்படுவதற்கு நீதிபதி விசாரணை தேவை என்கிற முடிவை அரசின் சார்பிலே எடுத்திருக்கிறோம். அந்த விசாரணையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனக்குக் கிடைத்த தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அவையிலே பேசுவதோடு அமையாமல், அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக ஒர் எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணத்தோடு என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ அந்தக் கடமைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் சொன்ன கருத்துக்களும் உள்ளபடியே ஏற்றுக்கொள்ள வேண்டிய நல்ல கருத்துக்கள். அவ்வளவு கருத்துக்களும் உண்மையா அல்லவா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தாலும் கூட, உண்மை எது, உண்மை அல்லாதது எது என்பது நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டும். அதற்கு நீதிபதியினுடைய விசாரணை நிச்சயமாகப் பயன்படும் என்ற கருத்தை நண்பர் பாண்டியன் அவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே பணியில் உள்ளவர்களை நியமிப்பதைப் பற்றி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் அவர்கள் சொன்ன கருத்தை பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே நினைவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கருத்து தனக்கு ஒத்தது இல்லை என்றும் அவர்கள் குறிப்

1990 ஆகஸ்ட் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

பிட்டு இருக்கிறார்கள், பணியில் உள்ளவர்களை இந்த நீதிபதி விசாரணைக்கு அமர்த்துவதா, அல்லது ஒய்வு பெற்ற ஒருவரை அமர்த்துவதா என்ற முடிவை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் எடுத்து நமக்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்பு கிறேன். அத்தகைய அறிவிப்பு வந்த பிறகு, அவர்கள் யாரை வைத்து இந்த விசாரணையை நடத்தலாம் என்று கருதுகிறார் களோ, அது நாட்டுக்கு செய்தியாக அறிவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-10 மணி.

இத்தோடு சேர்த்து பாண்டியன் அவர்கள் வேறொரு வழக் கைப் பற்றியும்—சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டில் தான் இருக்கிறார் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததாகச் சொன்னார். சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டிலே இல்லை என்பது தான் எங்களுக்கும் கிடைத்துள்ள தகவல். இது நம்முடைய காவல்துறையை மாத்திரம் குற்றம் சொல்வதாக கருதிவிடக் கூடாது. இதிலே எல்லா அதிகாரங்களையும் காவல் துறைக்கு-இங்குள்ள அரசு மாத்திரமல்ல, கர்நாடகத்திலே உள்ள அரசும் சேர்ந்து எல்லா அதிகாரங்களையும் காவல்துறைக்கு- அளித்திருக்கிறது. கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வீரேந்திர பாட்டீலை டில்லியிலே சந்தித்த போது அவரோடு இதைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். அவரும் இதைப்பற்றி என்னிடத்திலே விவாதித்திருக்கின்றார். இரு தரப்பு, இரு அரசுகளுடைய போலீசாரும் கலந்து பேசி, மிகுந்த ஒற்றுமை யோடு இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்ட தேவாரம் போன்ற அதிகாரிகளைப் பயன்படுத்த இந்த அரசு தயங்காது, அவருக்கு வேறு பணிகள் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணி ஒப்படைக்கப்படாமல் இருந்திருக்கலாம். அவரை இந்தப் பணியிலே ஈடுபடுத்துவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. எப்படி யும் இது போன்ற சமுதாய விரோதிகளை, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை வேறு வழியிலே இன்றைக்கு திருடிக் கொண்டிருக்கிற இத்தகைய கொள்ளைக்காரர்களைப் பிடிப் பதிலே அரசு தீவிரமாக இருக்கும். இதிலே இரண்டு அரசு களும்—கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டு மாநில அரசுகளுமே- மும்முரமாக ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால் விரைவிலே அந்தத் திருடர்கள் பிடிபடுவார்கள் என்பதையும் நான் தெரி வித்துக் கொண்டு, இந்த நீதிபதி விசாரணையில் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களைப் போன்ற உறுப் பினர்கள் தங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை எல்லாம் தர வேண்டும். ஏனென்றால் மறைந்து கிடக்கின்ற ஒரு பேருண்மை நாட்டுக்கு வெளியிடப்பட வேண்டுமென்ற அந்த ஆசையின் காரணமாக இதைத் தெரிவித்து அமைகிறேன்.